DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 338/2020** |
| Deposition of Witness for | : PW 7 |
| Name | : திரு. கண்ணன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 08.08.2026. |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 08 August 2026.

A3 died. A1,A2,A4 எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.

(எதிரி தரப்பு எந்தவொரு ஆட்சேபனை இல்லாமல் **Video Conference மூலம் பதிவு செய்யப்பட்டது)**

முதல்விசாரணை:

நான் தற்போது காவல் துணை கண்காணிப்பளராக பணியில் இருந்து கடந்த 2024ம் வருடம் ஒய்வு பெற்றுவிட்டேன். இதற்கு முன்பு குருவிகுளம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது ஏற்கனவே காவல் ஆய்வாரின் விசாரணையில் இருந்த குற்ற எண்.171/2013 இ.த.சா.பிரிவு. 465, 468, 471, 420 வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துகொண்டு வழக்கானது

செவல்குளம் சுப்பிரமணித்தேவர் மகன் பழனிசாமி என்பவரால் கொடுத்த புகாரின் அடிப்படையில் சார்பு ஆய்வாளர் செல்வரானி என்பவரால் வழக்கு பதிவு செய்யப்பட்டு அப்போது இருந்த காவல் ஆய்வாளர் மனோகரன் என்பவர் முதல் கட்டவிசாரணை செய்துள்ளார். இவ்வழக்கின் கண்ட எதிரிகள் ராஜ், சந்தனகுமார், அன்னராஜ், முத்தையா, ஆகியோர் கடந்த 09.10.2013-ம் தேதி திருநெல்வேலி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் Crlmp.No.4918/2013 கீழ் முன்ஜாமின் பெற்றிருந்தனர். காவல் ஆய்வாளர் மனோகரன் வழக்கு விசாரணைக்காக ஆவணங்கள் கேட்டு சங்கரன்கோவில் சார்பு பதிவாளர் மற்றும் தாசில்தாருக்கு வேண்டுதள் கடிதம் அனுப்பினார். சாட்சிகள் ராஜ்தேவர் மற்றும் சண்முகவேல் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மகஜர், மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். மேலும் அன்றைய தினமே சாட்சிகள் பழனிசாமி, மகாலிங்கம், சார்பு ஆய்வாளர் செல்வராணி மற்றும் ராஜ் தேவர் சண்முகவேல் ஆகியோர்களை விசாரணை செய்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இந்நிலையில் காவல் ஆய்வாளர் மனோகரன் 10.02.2014 ம் தேதி பணி மாறுதலில் சென்றுள்ளார். அதன் பின் பொருப்பேற்ற காவல் ஆய்வாளர் காமராஜ் 08.03.2014 முதல் இவ்வழககினை விராரணைக்கு எடுத்துகொண்டு சங்கரன்கோவில் சார்பு பதிவாளர் மற்றும் தாசில்தார் ஆகியோருக்கு வழக்கிற்கான ஆவணவங்களை கேட்டு நினைவூட்டு கடிதம் அனுப்பியுள்ளார். அதன் பின்பு 02.02.2017-ம் தேதி காவல் ஆய்வாளர் காமராஜ் பணிமாறுதலில் சென்றுள்ளதால் காவல் ஆய்வாளர் காளியப்பன் என்பவர் 25.02.2017 முதல் இவ்வழக்கினை விசாரணை செய்துள்ளார். கடந்த 23.09.2017-ம் தேதி நான் குருவிகுளம் காவல் நிலைய ஆய்வாளராக பொருப்பேற்றபின் இவ்வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துகொண்டேன். இவ்வழக்கு கோப்பை பார்வையிட்டதில் சங்ரகன்கோவில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் OS.No.413/2013 அதே நீதிமன்ற OS.No.61/2013 மற்றும் வழக்கின் மேல்முறையீடு AS.NO.13/2016 ஆகிய தீர்ப்பு நகல்கள் வழக்கு கோப்பில் இருந்ததன. மேலும் இவ்வழக்கு விசாரணைக்காக ஆவணங்களை கேட்டு

கொடுக்கப்பட்ட கடிதத்திற்கு பதில் கிடைக்கப்படாததால் மீண்டும் சங்கரன்கோவில் சார் பதிவாளர் மற்றும் தாசில்தார், செவல்குளம் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பினேன். வழக்கு விசாரணை செய்த காவல்ஆய்வாளர்கள், மனோகரன், காமராஜ், காளியப்பன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சங்கரன்கோவில் சார்பு பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட ஆவணத்தை பார்வையிட்டும் அதன் அடிப்படையில் சார் பதிவாளர் ஈஸ்வரம் என்பவரை கடந்த 12.02.2018–ம் தேதி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் கடந்த 21.09.2018–ம் தேதி செவல்குளம் கிராம நிர்வாக அலுவலரிடம் இருந்து பெறப்பட்ட ஆவணத்தை பார்வையிட்டும் அதன் அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலர் திருமதி. ஜெயா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம்பதிவு செய்தேன். இவ்வழக்கின் விசாரணையில் இருந்தும்,கிடைக்கப்பெற்ற ஆவணத்தின் அடிப்படையிலும் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் அத்துடன் வழக்கு விசாரணை முடித்து 08.03.2018–ம் தேதி ராஜ், சந்தனகுமார், அன்னராஜ், முத்தையா ஆகிய எதிரிகள் மீது இ.த.ச .பிரிவுகள் 465, 468, 471, 420–ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

புகார்தாரர் பழனிசாமி புகார் மனுவோடு எந்தவிதமான ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் அ.சா.1 18.02.2013 அன்று புலஎண்கள். 1463/4A மற்றும் 1463/4C –ல் உள்ள இடத்தை மகாலிங்கம் என்பரிடம் இருந்து கிரையம் பெற்றதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். 18.02.2013 ல் பழனிசாமி கிரையம் வாங்கிய ஆவணத்தை நான் வாங்கி பார்த்தேனா என்றால் வழக்கு கோப்பில் உள்ளது. முதல் தகவல் அறிக்கையில் அ.சா.1 18.02.2013 அன்று பழனிசாமி என்பவரிடம் மட்டும் கிரையம் வாங்கியதாக கூறியுள்ளார்

என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் ஆவண எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் சார்பு பதிவாளரை விசாரித்து இவ்வழக்கின் ஆவணத்தில் சான்றழிக்கப்பட்ட நகல்கள் ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி இரு புல எண்களில் உள்ள சொத்துக்களை கிரையம் முடித்த மகாலிங்கம் என்வருக்கு பூர்விகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என கிராம நிர்வாக அலுவலர் விசாரணையில் கூறியுள்ளார் என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் மேற்படி மகாலிங்கத்திற்கு இரண்டு மனைவிகள் என்று கூறினார் என்றால் சரிதான். இந்த வழக்கின் 1–வது எதிரி ராஜ், மகாலிங்கம் என்பவரின் முதல் மனைவிமூலம் பிறந்த மகன் என கூறியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி மகாலிங்கம் என்பவரின் இரண்டாவது மனைவி மூலம் பிறந்த மகன் முருகேசன் என்றால் சரிதான். மேற்படி சொத்துககள் மகாலிங்கம் என்பவரின் பூர்விக சொத்துக்கள் என்பதால் அவர்களின் வாரிசுகள் அனைவருக்கும் உரிமை உண்டு என்றால் சரிதான். 18.02.2010 அன்று மேற்படி சொத்துக்களை மகாலிங்கம் என்பரிடம் இருந்தும் அவரது இரண்டாவது மனைவியின் மகன் முருகேசன் என்பரிடம் இருந்தும் அ.சா.1 கிரையம் பெற்றதாக 18.02.2010–ம் தேதி கிரைய ஆவணம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 18.02.2010 தேதியில் கிரைய ஆவணம் மகாலிங்கத்தின் முதல் மனைவி மூலம் பிறந்த இந்த வழக்கின் 1–ம் எதிரி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி 18.02.2010 தேதியில் கிரைய ஆவணத்தில் கிரையம் கொடுக்கப்பட்ட சொத்தின் அளவு 29 செண்ட் என்றால் சரிதான். இந்த வழக்கின் 1–ம் எதிரி 2–ம் எதிரிக்கு பிறப்பித் கொடுத்த கிரைய ஆவணம் 29.08.2013 அன்று பிறப்பித்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 29.08.2013 கிரைய ஆவணத்தில் 1–ம் எதிரி மேற்படி புல எண்களில் உள்ள சென்ட்

29–ல் அவருக்கு பாத்தியப்பட்ட பிரிவின்றி 3ல் ஒரு பங்கு செண்ட் 9 ½ என்ற இடத்தை மட்டும் தான் 2–ம் எதிரிக்கு கிரையம்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கில் திருவேங்கடம் தாசில்தாரை விசாரணை செய்யவில்லை மேலும்மேற்படி இரு புல எண்களுக்கான விசாரணை காலத்தில் உள்ள கணினி பட்டாவை இவ்வழக்கில் இறுதி அறிக்கையுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கின் முதல் விசாரணை அதிகாரி மனோகரன் என்பவர் எனது விசாரணையில் வழக்கினை பார்வையிட்டதில் இது ஒரு சிவில் வழக்கிற்கான விபரம் என்பதை தெரிந்து கொண்டதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். எனக்கு முன்பு பணியாற்றிய ஆய்வாளர் காமராஜ் மற்றும் காயளியப்பன் ஆகியோர் எவ்வித விசாரணையும் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி இரு ஆய்வாளர்களும் எனது விசாரணையில் வழக்கு கோப்பினை பார்வையிட்டு மேற்படி வழக்கின் சாராம்சம் சிவில் வழக்கு சம்மந்தப்பட்டது என்று எனது வாக்குமூலத்தில் கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். எனது வழக்கின் விசாரணை காலத்தில் அ.சா.1 கிரையம் கொடுத்த முருகேசன் என்பவரையும், மகாலிங்கம் என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். நான்முதல் விசாரணையில் கூறியுள்ள இரண்டு உரிமையியல் வழக்கு பற்றி மேல்முறையீட்டு வழக்கு பற்றியும், அ.சா.1 உட்பட எந்த சாட்சிகளும் எனது விசாரணையில் கூறிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள உரிமையியல் வழக்கு மற்றும் மேல்முறையீட்டு வழக்கு தீர்ப்புகளை யார் மூலமாக காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்டது என்பது துலங்காது என்றால் சரிதான். நான் விசாரணையை முடித்து இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்போது, உரிமையியல் மன்ற தீர்ப்புகளையோ, மேல்முறையீட்டு தீர்ப்புகளையோ நீதிமன்றத்திற்கு

அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் கூறும் நாள் நேரத்தில் இவ்வழக்கை விசாரணை செய்ததாக கூறுவதும், நான் கூறுவது போல இவ்வழக்கில் கண்டுள்ள சாட்சிகளை விசாரணை செய்ததாக கூறுவதுவும், உண்மையில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் ஆவணங்கள் எதையும் சரிபார்க்காமலும், சம்மந்தப்பட்ட வட்டாட்சியரை விசாரிக்காமலும், ஒரு தலைபட்சமாக ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்த முதல் தகவல் அறிக்கைக்கு அனுசரணையாகவும், இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எனது விசாரணை இறுதி அறிக்கையில் கூறியபடி எதிரிகள் எந்த குற்ற செயல்களிலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

M MARI

Digitally signed by M MARI
Date: 2026.08.08 18:48:05 +0530